# ஆற்காடு நகராட்சி

## மன்றக் கூட்டப் பொருள்

## 30.11.2018-ம் தேதி பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.

**பொருள் எண்.01)** ஆற்காடு நகராட்சி 7.89 சதுர கி.மீ. பரப்பளவுடன் 30 வார்டுகளாக அமைந்துள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 55917 இந்நகராட்சியில் தற்போது தினசரி 5.48 மில்லியன் லிட்டர் குடிநீர், நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு 98 லிட்டர் என்ற அளவில் தினசரி ஒரு நாள் விட்டு ஒரு நாள் வழங்கப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.17018/2018/குவ1 நாள்.23.08.2018ல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2018–19ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34–ற்கான விவாதத்தின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பு எண்.14ல் கீழ்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

*“மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) நிறுவப்படும்”*

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* தனியார் தொழில் நிறுவனங்களுடன்/ தொழிற் முனைவோர்களுடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று (Corporate Social Responsibility fund) செயல்படுத்தவும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில்நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்யவும் பார்வையில் கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சியில் அமைந்துள்ள 30 வார்டுகளிலும் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* அமைப்பதற்கான மதிப்பீடு விவரங்கள் பின்வருமாறு.

| வ.எண். | வார்டு எண். | மதிப்பீடு தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 – பெரிய அசன்புரா தெரு | 18.00 |
| 2 | வார்டு எண்.2 – பாலசுந்தரம் தெரு | 18.00 |
| 3 | வார்டு எண்.3 – தேவி நகர் | 18.00 |
| 4 | வார்டு எண்.4 – பேருந்து நிலையம் அம்மா உணவகம் அருகில் | 18.00 |
| 5 | வார்டு எண்.5 – கொல்லப்பாளையம் மாரியம்மன் கோயில் தெரு | 18.00 |

| | | |
|---|---|---|
| 6 | வார்டு எண்.6 – நாட்டாண்மை ராஜி தெரு | 18.00 |
| 7 | வார்டு எண்.6 – வாத்தியார் கோவிந்தராஜ் தெரு, | 18.00 |
| 8 | வார்டு எண்.8 – கஸ்பா மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அருகில் | 18.00 |
| 9 | வார்டு எண்.9 – தாலுக்கா அலுவலகம் அருகில். | 18.00 |
| 10 | வார்டு எண்.10 – மேனேஜர் தெரு | 18.00 |
| 11 | வார்டு எண்.11 – எஸ்.ஆர்.பி அரிசி ஆலை அருகில் | 18.00 |
| 12 | வார்டு எண்.12 – ஒத்தவாடை தெரு | 18.00 |
| 13 | வார்டு எண்.13 – சீத்தாராமன் தெரு | 18.00 |
| 14 | வார்டு எண்.14 – இளங்குப்பன் தெரு | 18.00 |
| 15 | வார்டு எண்.15 – பாரதமாநில வங்கிஅருகில் | 18.00 |
| 16 | வார்டு எண்.16 – கே.எம்.எல் மேல் நீர்தேக்கத் தொட்டி அருகில் | 18.00 |
| 17 | வார்டு எண்.17 – குட்டகரை தெரு | 18.00 |
| 18 | வார்டு எண்.18 – வேலூர் மெயின்ரோடு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் | 18.00 |
| 19 | வார்டு எண்.19 – அண்ணாநகர் தெரு | 18.00 |
| 20 | வார்டு எண்.20 – அஞ்சநேயர்கோயில் தெரு | 18.00 |
| 21 | வார்டு எண்.21 – இராதாகிருஷ்ணன் தெரு | 18.00 |
| 22 | வார்டு எண்.22 – வேலூர் மெயின்ரோடு முதல் தெரு. | 18.00 |
| 23 | வார்டு எண்.23 – புதுதெரு | 18.00 |
| 24 | வார்டு எண்.24 – நகராட்சி தெற்கு பள்ளி அருகில் | 18.00 |
| 25 | வார்டு எண்.25 – மேட்டு தெரு | 18.00 |
| 26 | வார்டு எண்.26 – கானார் அரசமரத் தெரு | 18.00 |
| 27 | வார்டு எண்.27 – | 18.00 |

| | | |
|---|---|---|
| | ராஜி தெரு | |
| 28 | வார்டு எண்.28 – பூபதி நகர் | 18.00 |
| 29 | வார்டு எண்.29 – திருநாவுக்கரசு தெரு | 18.00 |
| 30 | வார்டு எண்.30 – ஏரிக்கரை தெரு | 18.00 |
| | **மொத்தம்** | **540.00** |

ஆற்காடு நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளில் தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* அமைக்கும் பணி மேலே பட்டியலில் கண்டுள்ள மதிப்பீட்டின்படி மேற்கொள்ள "Expression of Interest" கோரவும் இத்திட்டப்பணிக்கான முழுத் தொகை மற்றும் பராமரிப்புச் செலவினம் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட 30 வார்டு பகுதிகளில் தானியங்கும் குடிநீர் மையங்கள் *(Automatic Vending Centers)* அமைக்கும் பணியினை ரூ.540.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள "Expression of Interest" கோரவும் இத்திட்டப்பணிக்கான முழுத் தொகை மற்றும் பராமரிப்புச் செலவினம் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

ந.க.எண்.2785/2018/இ1

**பொருள் எண்.02)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான தெற்கு அரசு உயர்நிலைப்பள்ளி கழிவறையை பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பள்ளியில் உள்ள கழிவறை நிறைந்து பயன்படுத்த முடியாமல் உள்ளதினால் கழிவறை சுத்தம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.12500/–க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி பொதுசுகாதாரப் பணி பாதிக்காமல் இருக்க தனி அலுவலர் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம் மேலும் கல்விநிதியில் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.03)** இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள அனைத்து கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் (AMC) Anand Maintenance வருடாந்திர பராமரிப்பு ஆண்டிற்கு (365 நாட்கள்) பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.2.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.04)** இந்நகராட்சி அரசு நகராட்சி உயர்நிலைப்பள்ளி தெற்கு தோப்புகானா பள்ளியில் உள்ள நச்சு தடை தொட்டி சுத்தம் செய்ய லோடு ஒன்றிற்கு எவ்வளவு என விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் (லோடு ஒன்றிற்கு) ரூ. |
|---|---|---|
| 1 | பரணி, செப்டிக்டேங்க் கிளினிக் | 3000/– |
| 2 | சந்திரா செப்டிக்டேங்க் கிளினிக் | 2700/– |
| 3 | விஜய்குமார், விஜய்செப்டிக் டேங்கு கிளினிக் | 2500/– |

அ.கு:– 1) வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.3ல் கண்டுள்ள விஜய்குமார் என்பவர் குறைந்த விலைப்புள்ளி அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.05)** இந்நகராட்சி அரசு உயர்நிலைப்பள்ளி வடக்கு தோப்புகானா, ஆற்காடு பள்ளியில் உள்ள கழிவறை நச்சுத்தடை தொட்டி (Septic Tank) நிறைந்து பொதுசுகாதாரம் பாதிப்பு ஏற்படுவதினால் மேற்படி நச்சுதடை தொட்டி சுத்தம் செய்ய ஆகும் தோராய செலவு ரூ.10,000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) அவசர அவசியம் கருதி பொது சுகாதாரப் பணி பாதிக்காமல் இருக்க தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.06)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின்கீழ் தினசரி Door to Door குப்பை திடகழிவுகளை சேகரிக்கும் 30 எண்ணிக்கை கை தள்ளுவண்டிகளின் டயர் டியூப் தினசரி பயன்படுத்தப்பட்டு வருவதினால் டயர் டியூப் பழுது அடைந்து பொதுசுகாதாரப் பணி பாதிக்கப்படுகின்றது. மேற்படி டயர் டியூப் வாங்குவதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/–க்கு மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) அவசர அவசியம் கருதி பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் இருக்க உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்

3) SWM நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள் எண்.07)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின்கீழ் இரண்டாம் நிலை சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் TN23L1038 மினி லாரிக்கு தகுதி சான்று பெற வேண்டியுள்ளதினால் வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1,80,000/–க்கு மன்ற அனுமதி பெற மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) தகுதி சான்று பெறுவது காலமுறை ஆவதினால் பொதுசுகாதார பணிகள் பாதிக்காமல் இருக்க தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.08)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில்தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஏழு பரப்புரையாளர்கள் மற்றும் ஒரு மேற்பார்வையாளர் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக நியமனம் செய்து திடக்கழிவு மேலாண்மை குறித்து விழிப்புணர்வு பணிகள், திறந்த வெளியில் மலம் சிறுநீர் கழித்தல் அறவே நீக்கம் விழிப்புணர்வு பணிகள் மற்றும் தனிநபர் கழிப்பிடம் இல்லாத வீடுகளை கண்டறிந்து கழிப்பிடம் கட்டும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26458–1/2018/தி1, நாள். 31.07.2018 ஆம் நாளில் மூன்று மாதங்களுக்கு (01.09.2018 முதல் 30.11.2018 வரை) கால நீடிப்பு செய்யப்பட்டது. மேலும், இதற்கான ஊதிய தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் அரசிடமிருந்து பெற்றபின் ஈடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணியினை தொடர் நடவடிக்கையில் மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டத்தில் தற்போது இதற்கான தொகை ரூ. 33,794/– ஆக உள்ளது. இதனால் அக்டோபர் 2018 மற்றும் நவம்பர் 2018 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மேற்படி பணியாளருக்கு ஊதியம் வழங்கவேண்டி தோரய செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26458–1/2018/தி1, நாள்.31.07.2018ஆம் நாளின் உத்திரவின் படி தூய்மை இந்தியா திட்டத்தின் செயலாக்க பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்க வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) மேற்காணும் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2584/2017/எச்1

**பொருள் எண்.09)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் பயன்படுத்தப்படும் TN73E0167 என்ற டிப்பர் ஆட்டோ வாகனத்திற்கு தகுதி சான்று பெற வாகனத்தில் உள்ள பழுதுகளை நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளதினால் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.35,000/–க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) தகுதிசான்று பெற்றுவர காலமுறை ஆவதினால் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்லாம்.

**பொருள் எண்.10)** ஆற்காடு நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கிவரும் சித்த மருத்துவ மனைக்கு வரும் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் நோயாளிகள், மாணவ மாணவியர்கள் மற்றும் பொது மக்களுக்கு முன் எச்சரிக்கை நடவடிக்கை மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகாகவும் நில வேம்பு குடிநீர் கலவை தற்போது குறைவாக இருப்பதால் இதனை அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான சென்னை டாம்கால் நிறுவனத்திடம் இருந்து 300 கிலோ வாங்க செலவினத் தொகை ரூ.95130/–க்கு மன்றப் பொருள் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் இயங்கி வரும் சித்த மருத்துவமனைக்கு நில வேம்பு குடிநீர் கலவை அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான சென்னை டாம்கால் சித்த மருத்துவ நிறுவனத்திடம் இருந்து 300 கிலோ வாங்க செலவினத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்சலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.11)** ஆற்காடு நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கிவரும் சித்த மருத்துவ மனைக்கு வரும் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் புற நோயாளிகளுக்கு ஏற்படும் கை கால் உடல் வலிகளுக்கு பெயின்பாம் என்ற சித்த மருந்து தேவைப்படுவதால் இதனை அவசர அவசியம் கருதி 10 கிராமில் 200 எண்ணிக்கை தேவைப்படுவதால் அரசு அங்கீகரிக்கப்பட்ட சென்னை டாம்கால் சித்த மருத்துவ நிறுவனத்தில் வாங்க தோராய செலவினத் தொகை ரூ.3696/–க்கு மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி சித்த மருத்துவமனைக்கு காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் புற நோயளிகளுக்கு ஏற்படும் கை கால் உடல் வலிகளுக்கு பெயின் பாம் உடனடியாக அரசு அங்கீகரிக்கப்பட்ட சென்னை டாம்கால் சித்த மருத்துவ நிறுவனத்தில் வாங்க தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத் தொகை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.426/2016/எச்1

**பொருள் எண்.12)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் (AN1 H1) பன்றி காய்ச்சல் பாதிக்காமல் இருக்க தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் பன்றிகாய்ச்சல் அறிகுறி கொண்ட நபர்களின் வீடுகளில் தொற்று பரவாவண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும், மக்கள் கூடும் இடங்களான பஸ்நிலையம், சினிமா தியேட்டர், மருத்துவமனை மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள 20 லிட்டர் லைசால் 5% தேவைப்படுவதினால் வாங்கிகொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.5000/–க்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி பொதுசுகாதார பணிகள் பாதிக்காமல் இருக்க உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.13)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள கொசு புழு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் அபேட் கொசு புழு ஒழிப்பு மருந்து தொடர்ந்து உபயோகபடுத்தப்பட்டு வருவதினால் இருப்பு குறைவாக உள்ளது. எனவே அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் TNMSL அவர்கள் நிர்ணயித்த நிறுவனத்திடம் நிர்ணயம் செய்த விலைவிகிதத்தில் நேரடியாக வாங்கி கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.60000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி பொதுசுகாதார பணிகள் பாதிக்காமல் தளி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.14)** 2017–18ம் நிதியாண்டுகளில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சி திட்டப் பணிகள் விவரத்தினை தீபாவளி மலர் மற்றும் ஆயுதபூஜை மலர், தினத்தந்தி, தினமணி, தினகரன்,தினமலர் ஆகிய விளம்பர நாளிதழ்களில் 06.10.2018 மற்றும் 18.10.2018 தேதிகளில் விளம்பரம் வெளியிடப்பட்டதற்கு மேற்கண்ட விளம்பர நிறுவனத்திற்கு வழங்கவேண்டிய பில்தொகை ரூ.58275/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதிபெற்று விளம்பர செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.15)** இந்நகராட்சியில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வந்த இணை சேவைக்கான BSNL இணைப்புகள் குறைவான வேகத்துடன் இருந்ததால் கணினி சம்மந்தமான அலுவலகப்பணிகள் தாமதமாகிறது. எனவே அலுவலக பணிகள் வேகமாக நடைபெற தகுந்த அதிவேக இணைய சேவை தரும் Rail Nett சேவை வழங்க UTV Network, ஆற்காடு அவர்களிடம் Internet Speed மற்றும் Monthly Tariff ஆகியவற்றை பெற்று நகராட்சியில் இணையதள சேவை பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும், செப்டம்பர் 2018 முதல் மார்ச் 2019 வரை (2018–19) UTV Network- ன் மாதாந்திர பில் தொகைகளை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) இணைய சேவையின் அத்தியாவசியம் கருதி Rail Nett சேவை பெற்றுக் கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிபெற்று UTV Network பெற்றுக் கொண்டதற்கும் இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.16)** இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பொறியியல் பிரிவு பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் ஒட்டுநர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை சீருடை வாங்கி வழங்குவதும் துப்புரவு பணியாளர்களுக்கு காலணி வாங்கி வழங்குவதற்கு 2018–19 ஆண்டிற்கு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றஅனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) சீருடை வாங்கி வழங்குவது காலமுறை ஆவதினால் சீருடை வாங்கி வழங்கவும் காலணி வாங்கி வழங்கவுவும மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.17** ஆற்காடு நகராட்சியானது 22.03.1998ம் ஆண்டு முதல்நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் தற்போது மக்கள் தொகை 61545–ஆக உள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு 7.49 சதுர கிலோ மீட்டர் கொண்ட 30 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகரில் 198 தெருக்களும் சுமார் 19284–க்கு மேற்பட்ட குடியிருப்புகளும், ஒரு பேருந்து நிலையம், தினசரி காய்கறி அங்காடி, இறைச்சி கடைகள், உழவர் சந்தை, நகராட்சி வணிக வளாக கடைகள் மற்றும் தொழிற்கூடங்கள் மூலம் தினமும் சுமார் 19 மெட்ரிக் டன் அளவு குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 30.04.1997–ல் வெளியிடப்பட்டுள்ள அளவுகோலின்படி, துப்புரவுப் பணியாளர்கள் தேவை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சியில் உள்ள மொத்த குடியிருப்புகள் எண்ணிக்கை | 19284 |
| 2 | 250 குடியிருப்புகளுக்கு 3 துப்புரவுப் பணியாளர்கள் கொண்ட குழு (19284 x 3/250) | 231 |
| 3 | நகராட்சியில் உள்ள வாகனங்கள் விவரம் | |
| | அ) டிப்பர் லாரி –3 | |
| | ஆ) டம்பர் பிளேசர் –1 | |
| | இ) ஆட்டோ –3 | |
| 4 | டிப்பர் லாரி ஒன்றிற்கு 3 துப்புரவுப் பணியாளர்கள், டம்பர் பிளேசர் ஒன்றிற்கு 2 துப்புரவு பணியாளர்கள், ஆட்டோ ஒன்றிற்கு 1 துப்புரவு பணியாளர்கள் என கணக்கிட்டால் தேவைப்படும் மொத்தம் பணியாளர்களின் எண்ணிக்கை (3 x 3=9) + (1 x 2=2) + (3 x 1 =3) | 14 |
| 5 | ஆற்காடு பேருந்து நிலையம் சுத்தம் செய்ய (சி – வகை) | 2 |
| 6 | நேத்தாஜி தினசரி காய்கறி அங்காடி மற்றும் கழிவறை சுத்தம் செய்ய | 4 |
| 7 | 3 எண்ணிக்கையில் தலா 3 டன் கொள்ளளவு கொண்ட நுண் உர மையங்களில் பணிபுரிய தேவைப்படும் துப்புரவுப் பணியாளர்கள் (3 x 10) | 30 |
| | மொத்தம் (வ.எண்.2+4+5+6+7) | 281 |

மேற்கண்டுள்ள கணக்கீட்டின் படி ஆற்காடு நகராட்சியில் 281 துப்புரவுப் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது இந்நகராட்சியில் 60 நிரந்தரப்பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்தம் மூலம் 55 ஆக மொத்தம் 115 மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள், வீடு வீடாக குப்பை சேகரித்தல் மற்றும் 3 எண்ணிக்கை கொண்ட தலா 3 டன் கொள்ளளவு கொண்ட நுண் உர மையங்களில் கலவை உரம் தயார் செய்தல் போன்ற பணிகள் செவ்வனேச் செய்வதற்கு 166 பணியாளர்கள் பற்றாகுறையாக உள்ளது. எனவே, 166 பணியாளர்களை புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் மூலமாக ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 166 துப்புரவுப் பணியாளர்களுக்கான கூலி கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

**துப்புரவுப் பணியாளர்கள் செலவினங்கள் விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் வேலூர் அவர்களின் தினக்கூலி பட்டியல் படி துப்புரவுப் பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டுக்குரிய தினக்கூலி | ரூ. 325/– |
| 2 | ஒரு துப்புரவுப் பணியாளருக்கு 1 ஆண்டுக்குரிய கூலி (325 ஒ 365) | ரூ. 118625/– |
| | ESI 13.61 % | ரூ. 16145/– |
| | EPF 4.75 % | ரூ. 5635/– |
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்க்ளுக்கு ஆண்டுக்குரிய தொகை | ரூ. 1500/– |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 5 % | ரூ. 5931/– |
| | நிகர மொத்தம் | ரூ. 147836/– |
| 3 | 166 துப்புரவுப் பணியாளர்களுக்கு ஓர் ஆண்டுக்குரிய செலவினம் ரூ. 147836 X166 | ரூ. 24540776/– |

ஆற்காடு நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் திடக்கழவு மேலாண்மை திட்ட பணிகள் திறம்பட செயல்படுத்தவும், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல் மற்றும் நுண் உர மையங்களில் கலவை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளவும் 166 துப்புரவுப் பணியாளர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி 3 வருடங்கள் பணியில் ஈடுபடுத்தவும் இதற்கான ஒரு வருடத்திற்கானச் செலவினம் ரூ.2.45 கோடி நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒவ்வொரு ஆண்டின முடிவிலும் பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்த தொகையில் 5% உயர்வு செய்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தம் புதுப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

மேலும் இப்பணியானது 01.12.2018 முதல் ஒருவருட காலம் மேற்கொள்ள தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ.2.45 கோடி நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் 166 பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடுத்தவும், பணி ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அ.கு 1)_ஆற்காடு நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள 166 துப்புரவுப் பணியாளர்கள் 3 வருடம் பணியில் ஈடுபடுத்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

2) ஒப்பந்தம் செய்யும் நாளிலிருந்து 1 ஆண்டு முடியம் போது பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்தத் தொகை உயர்வு செய்து மன்ற ஒப்புதலுடன் ஒப்பந்தம் புதுப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாளிலிருந்து முதல் ஒரு வருடம் காலத்திறக்கான உத்தேச செலவினத்தொகை ரூ.2.45 கோடி நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2323/எச்1/2017–2

**பொருள் எண்.18** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு குடிநீர் நிதி திட்டத்தின் கீழ் ரூ.90,000/– மதிப்பீட்டில் வார்டு எண்.28, பூபதி நகர் பகுதியில் புதிதாக பைப்லைன் அமைத்தல் பணிக்கு 25.10.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** |
|---|---|---|
| **1** | திரு.என்.எழிலன் | 0.02 % மதிப்பீட்டினை விட குறைவு |
| **2** | திரு.ஆர்.குணசேகரன் | 0.57 % மதிப்பீட்டினை விட அதிகம் |

**அ.கு. 1)** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.02 % சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.19** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.9.90/– இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.04, அமீன்பிரான் தர்கா தெருவில் உள்ள புதிய துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு பிளாக்(பி) கட்டிடத்தில் நச்சுதொட்டி அமைத்தல் நடைபாதை, சாலையோர உட்புறத்தில் Shelt அமைத்தல், கழிவுகள், குடிநீர் வசதி அமைத்தல் பணிக்கு 25.10.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** |
|---|---|---|
| **1** | திரு.ஆர்.குணசேகரன் | 0.07 % மதிப்பீட்டினை விட குறைவு |
| **2** | திரு.என்.எழிலன் | 0.16 % மதிப்பீட்டினை விட அதிகம் |

**அ.கு. 1)** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.குணசேகரன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.07 % சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.ஆர்.குணசேகரன் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.20** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.9.80/– இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.04, அமீன்பிரான் தர்கா தெருவில் உள்ள புதிய துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு பிளாக்(எ) கட்டிடத்தில் நச்சுதொட்டி அமைத்தல் நடைபாதை, சாலையோர உட்புறத்தில் Shelt அமைத்தல், கழிவுகள், குடிநீர் வசதி அமைத்தல் பணிக்கு 25.10.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.குணசேகரன் | 0.14 % மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | திரு.என்.எழிலன் | 0.10 % மதிப்பீட்டினை விட அதிகம் |

**அ.கு. 1)** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர்.குணசேகரன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.14 % சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.ஆர்.குணசேகரன் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.21** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் ரூ.3.00 மதிப்பீட்டில் இந்நகராட்சி எல்லையில் (சென்னை – பெங்களூர்) நெடுஞ்சாலை பாலாறு பாலத்தின் மேல் பழுதடைந்துள்ள LED Fittings பழுது பராமரிப்பு பணிக்கு 25.10.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி இன்டஸ்டீரிஸ் | 0.33 % மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | திரு.டி.கணேஷ் | 0.60 % மதிப்பீட்டினை விட அதிகம் |

**அ.கு. 1)** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ பாலாஜி இன்டஸ்டீரிஸ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.33 % சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஸ்ரீ பாலாஜி இன்டஸ்டீரிஸ் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.22** ஆற்காடு நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள TN73E 0155 என்ற ஈப்பு வாகனம் பழுது அடைந்துள்ளதால் உடனடியாக நிவர்த்திசெய்ய வேண்டி மகேந்திரா ஜீப் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான வேலூர் ஜெயின் கார்ஸ்–ல் பழுதினை நிவர்த்தி செய்து அதற்கான பட்டியல் தொகை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள **31.10.2018**ஆம் நாளில் மன்றத்தின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, தொகை ரூ.**58,428/**–ஐ வேலூர் மகேந்திரா ஜீப் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திற்கு வழங்க வேண்டி மன்றத்தின் முன் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

அ.கு:– **1)** மன்றம் அனுமதிக்கலாம்

**2)** TN73E 0155 என்ற ஈப்பு வாகனம் பழுதினை மகேந்திர ஜீப் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான வேலூர் ஜெயின் கார்ஸ்–ல் நிவர்த்தி செய்ய வேலைக்கான உத்திரவு வழங்கப்பட்டதற்கு பட்டியல் தொகை தற்போது பெறப்பட்டுள்ளதை வருவாய் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.**2356/2018**/எச்**1**

**பொருள் எண்.23** இந்நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் மேற்கூரை சரிசெய்தல் மற்றும் False celling மேற்கூரை அலங்காரம் பழுதடைந்துள்ளதை சரிசெய்திடவும் பணி மேற்கொள்வதற்கான தோராய செலவினம் ரூ.**49,000/**–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– **1)** மன்றம் அனுமதிக்கலாம்

**2)** மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.24** இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடாக தழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை அப்புறப்படுத்தவும், அதற்காக ஓஸ், ரோப்கயிறு, கடப்பாறை, மண்வெட்டி, கத்தி போன்ற பொருட்களை வாங்கி பயன்படுத்துவதற்கும் ஆகும் தோராய செலவினம் ரூ.**50,000/**–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு:– **1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**2)** மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.25** இந்நகராட்சிக்கு சொந்தமான பொலிரோ ஈப்பு வாகனம் TN73E0138-ல் குளிர்சாதன வசதி பழுதடைந்துள்ளதால் அதனை சரிசெய்திடும் பணிக்கும் இதர பழுது பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கும் தோராய செலவினம் ரூ.**15000/**–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இப்பணியின் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி ரூ.** |
|---|---|---|
| **1** | திருமதி.பி.ஹயாதிபீவி, | **14,240/–** |
| **2** | திரு.ராஜாராம் & கோ | **16,300/–** |
| **3** | திரு.என்.எழிலன் | **16750/–** |

அ.கு:– **1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**2)** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.26** இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (SBM – 2018-19)ன் கீழ் Battery operated vehicle 10 Nos. LCV 3 Nos. வாங்குதல் பணிக்கான 20.09.2018ல் தேதிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிட்டதற்கு மாலைதமிழகம் நிறுவனத்திற்கு வழங்கவேண்டிய பில்தொகை ரூ.10,080/–க்கு மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.

அ.கு:– 1) மன்றம் அனுமதிக்கலலம்.

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவு. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.27** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு SBM – SWM திட்டத்தின் கீழ் ரூ.16.80 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்கு Ligh Commercial vehicle (LCV)-3 3 எண்ணம் சப்ளை செய்தல் பணிக்கு 20.09.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் Online / Offline வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | Tata motors Limited | 6.25% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | Krystd Motors (P) Ltd | 1.30 % மதிப்பீட்டினை விட குறைவு |
| 3 | Sakthi body works | 0.82 % மதிப்பீட்டினை விட குறைவு |
| 4 | VAMBSK Fabs | 0.89 % மதிப்பீட்டினை விட குறைவு |

**அ.கு.** 1) மேற்கண்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் Tata motors Limited ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 6. 25 % சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.28** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு SBM – SWM திட்டத்தின் கீழ் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்கு Battery operated vehicle 10 எண்ணம் சப்ளை செய்தல் பணிக்கு 20.09.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் Online / Offline வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற ஆறு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | Prevalnce Green solutions Pvt Ltd, | 5.00% மதிப்பீட்டினை விட குறைவு |
| 2 | Vatsala Associates | 2.78 % மதிப்பீட்டினை விட குறைவு |
| 3 | Priyan Industries & Engg. Pvt Ltd, | 0.06 % மதிப்பீட்டினை விட குறைவு |

| | | |
|---|---|---|
| 4 | Shuttle Cars Pvt Ltd, | 1.42 % மதிப்பீட்டினை விட குறைவு |
| 5 | Arun Indian Motors | 0.28 % மதிப்பீட்டினை விட குறைவு |
| 6 | Naptune Automation | 16.72 % மதிப்பீட்டினை விட குறைவு |

**அ.கு.** **1)** மேற்கண்ட ஆறு ஒப்பந்தப்புள்ளிகளில் Naptune Automation ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 16.72 % சதவீதம் குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.29** இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு SBM – SWM திட்டத்தின் கீழ் ரூ.257.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.9, கோட்டை மேட்டுகாலணி தெருவில் உள்ள உரக்கிடங்கில் Bio mining பணிக்கு 12.10.2018 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் Online / Offline வரவேற்கப்பட்டதின் படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | ECO Garb | 4.63% மதிப்பீட்டினை விட அதிகம் |
| 2 | Task Constructions | 9.48 % மதிப்பீட்டினை விட அதிகம். |

**அ.கு.** **1)** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ECO Garb ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.63 % சதவீதம் அதிகமாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.என்.எழிலன் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணிக்கான மதிப்பீட்டினை விட அதிகமான 4.63 % சதவீதத்திற்கான தொகையை பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ஆற்காடு** **தனி அலுவலர்,**
**நாள்: 30.11.2018** **ஆற்காடு நகராட்சி.**